களை நம்பி அவர்கள் இருக்கின்றார்கள், அதுவும் பேருந்தை விட்டுவிட்டால், அவர்கள் சைக்கிளிலே வந்து போக வேண்டிய நிலை இருக்கிறது. பேருந்தை விட்டுவிட்டால் அவர்கள் வருவது சிரமம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஹாஸ்டல் கேட்கப் போகிறீர்களா? பேருந்து கேட்கப் போகிறீர்களா? ஹாஸ்டல் ஆரம்பிக்கப்படுமா என்று கேளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவையாறு ஊராட்சிக்குட்பட்டு மாணவர் விடுதி அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோன்று, திருவையாறு ஒன்றியத்திலே இப்போது மாணவர்கள் விடுதி இல்லை என்று தெரிகிறது. இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு புதிய விடுதி தொடங்க இயலுமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். அப்படி தொடங்குவதானாலும் அது மாணவியருக்குத்தான் விடுதி தொடங்குவதற்கு அரசு இப்போது முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 458, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

458—

பட்டணம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம்.

*4218 திருமதி க. பழனியம்மாள்:
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராசிபுரம் தொகுதி பட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஹட்கோ நிதியுதவி மூலம் 1991–92 ஆம் ஆண்டில் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ள 64 பள்ளிகளுள், பட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளியும் அடங்கும்.

(ஆ) கட்டுமானப் பணிக்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இராசிபுரம் பட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்காக அனுமதி வழங்கியிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு, அங்கே எத்தனை வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளிக்கு 3 வகுப்பறைகள் வீதம் வகுப்பறைக் கட்டிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்குரிய அந்த செலவுத் தொகைப் பற்றிய விவரம் இதிலே இல்லை. தனியே கேட்டால் தரப்படும்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்பட்டு, மாணவர்களுடைய பயனுக்காக வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஆகவே, செலவுத் தொகை கொஞ்சம் ஏறுகின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி எல்லாம் முடிவு செய்து, கூடிய விரைவிலே அந்தக் கட்டிடத்தை முடிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 459, திரு. எ. ஏகாம்பர ரெட்டி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அரசு கலைக்கல்லூரிகளில் இட ஒதுக்கீடு.

459—

*4300 திரு. எ. ஏகாம்பர ரெட்டி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1990–91-ல் இலங்கைத் தமிழ் அகதிகளின் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு தமிழ்நாட்டில் உள்ள அரசு கலைக் கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டு வந்த இடங்களை ரத்து செய்ய அரசு உத்தரவிட்டுள்ளதா ?